### முத்தமிழறிஞர் கலைஞரை விமர்சித்தும் - சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்கும் வகையிலும் சீமான் பேசுகிறார்!

# நாவை அடக்கிப் பேச வேண்டும்!

## அமைச்சர் பி.கீதாஜீவன் – சீமானுக்கு எச்சரிக்கை!

**தூத்துக்குடி, ஜூலை 14-**

**“தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் முத்தமிழறிஞர் கலைஞர்; தமிழ்மொழிக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்! மதம், சாதியின் பெயரால் சட்டம், ஒழுங்கைச் சீர்குலைக்க சீமான் முயற்சிக்கிறார். சீமான் தனது மனநிலையை சோதிப்பது நல்லது! என அமைச்சர் பி.கீதாஜீவன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**“ஒரு கட்சித் தலைவருக்கு இருக்க வேண்டிய உயரிய பண்புகள் சீமானிடம் கடுகளவு கூட இல்லை! சீமான் நாவை அடக்கிப் பேச வேண்டும்!” என கடுமையாக எச்சரித்துள்ளார்.**

தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் –அமைச்சருமான கீதாஜீவன் நேற்று முன்தினம் தூத்துக்குடியில் செய்தியாளர்களைச் சந்தித்தபோது குறிப்பிட்டதாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் குறித்த சீமானின் பேச்சை தி.மு.க. வன்மையாகக் கண்டிக்கிறது. தலைவர் கலைஞர் குறித்து தமிழ்நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ்மொழிக்குச் செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்தவர். இளைஞர்களுக்காக முதல் தலைமுறை பட்டதாரி திட்டம், கல்விக் கடன் ரத்து, நுழைவுத் தேர்வு ரத்து, கணினிக் கல்வி வளர்ச்சி என அவர் கொண்டு வந்த திட்டங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அவரைப் பற்றி இழிவாகப் பேசுவதை தி.மு.க. வன்மையாகக் கண்டிக்கிறது. கட்சித் தலைவர் என்பவர், ஆதரவாளர்களோ நிர்வாகிகளோ தவறாகப் பேசும் போது கண்டிக்க வேண்டும். மாறாக தலைவர் கலைஞர் குறித்துப் பேசும் போது இவர் சிரித்துக் கொண்டு இருக்கிறார். அவர் வழி நடத்தத் தெரியாத நிலையில் இருக்கிறார்.

நமக்கு முன்பாக ஒன்று பேசுகிறார். பின்பு அந்தக் கருத்தை மாற்றிப் பேசுகிறார். கலைஞர் ஓய்வின்றி உழைப்பவர் எனவும், ஆளுமை எனவும் கலைஞர் மறைவின் போது தனது அறிக்கையில் குறிப்பிட்டவர் சீமான் ஆனால் தற்போது வேறு விதமாகப் பேசுகிறார்.

> **“சீமான் தனது மனநிலையைச் சோதித்துக் கொள்வது நல்லது”**



தி.மு.க. தொண்டர்களைப் பொறுத்த வரையிலும், தற்போதைய தலைவரின் கண் அசைவுக்காகத்தான் காத்திருக்கிறார்கள். பொறுமையாக இருக்கிறார்கள். ஆளுங்கட்சியில் இருக்கிறோம். முதலமைச்சராக தலைவர் பொறுப்புடன் இருக்கிறார். ஆகவே பொறுமையாக இருக்கிறோம்.

**பொறுப்புடன் இருப்பதால் பொறுமையுடன் இருக்கிறோம்!**

அவதூறுக் குற்றச்சாட்டு சொல்லும்போது கூட எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை., ‘சீமான் கட்சியைச் சேர்ந்த துரைமுருகன் சாதிப் பேரைச் சொல்லி இழிவாகப் பேசுகிறார்’ என, அருண் என்பவர் புகார் அளித்ததன் அடிப்படையில் அரசு நடவடிக்கை எடுத்து உள்ளது.

ஆனால், “கருத்துரிமை பறிக்கப் படுவதாக” சீமான் சொல்கிறார். பட்டியலினப் பட்டியலில் 15வது இடத்தில் அந்தச் சொல் இருப்பது சீமானுக்கும் தெரியும். திரைப்படத்தில் இந்தச் சொல்லைப் பயன்படுத்தியதற்காக சீமான் சில ஆண்டுகளுக்கு முன்பு வருத்தம் தெரிவித்ததை அனைவரும் அறிவார்கள். ஆனாலும் வாய்க்கு வந்தது போல் பேசி இருக்கிறார். மீண்டும் அதே கருத்தைப் பேசி ‘கைது செய்து பாருங்கள்’ என சீமான் பேசுவது, ஒரு தலைவருக்கான பண்பு இல்லை.

சாதி, மத ரீதியிலான பிரச்சினைகளை உருவாக்கும் வகையில் சீமானின் பேச்சு இருக்கிறது. “நாமெல்லாம் தேவனுடைய பிள்ளைகள் என நினைக்கிறோம். ஆனால் இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் சாத்தானின் பிள்ளைகள் ஆகி நீண்டகாலம் ஆகிவிட்டது” என ஒரு அறிக்கையில் பழி சொல்லிப் பேசி இருக்கிறார்.

**சட்டம் – ஒழுங்குப் பிரச்சினை!**

தூய்மைப் பணியாளர்கள் எல்லாம் தெலுங்கில் இருந்து வந்தவர்கள் எனப் பேசி இருக்கிறார். தமிழ், தமிழ்க்குடி எனப் பேசும் இவர்கள் எப்படி சாதிப் பெயர் சொல்லி இழிவாகப் பேசுகிறார்கள்? சட்டம் ஒழுங்கு பிரச்சினையை உருவாக்கும் வகையில் அவர் பேசுவதை தி.மு.க. கண்டிக்கிறது.

இன்று ஒன்று பேசுகிறார். அடுத்தாண்டு மாற்றிப் பேசுகிறார். ஆகையால் அவரது மனநிலையைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

தனிப்பட்ட முறையில் தவறான சொற்களைப் பயன்படுத்தி சீமான் பேசுவது சட்டம் ஒழுங்குப் பிரச்சினையை உருவாக்கும் வகையில் அமைகிறது. இது ஏற்கத்தக்கதல்ல. நடைமுறைக்குச் சாத்தியமில்லாததை அடுக்கு மொழியில் பேசி தமிழ்ச் சமூகத்தை தவறாக வழி நடத்த முயற்சிக்கிறார்.

கட்சி நடத்த எங்கிருந்து அவர் பணம் வாங்குகிறார் என அனைவருக்கும் தெரிய வாய்ப்புள்ளது. இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி உலக அளவில் நன்கொடை பெற்று வருகிறார்.

**பச்சோந்திப் பேச்சு!**

தமிழ்நாட்டில் தி.மு.க. எதிர்ப்பைக் காட்டிக் கொள்வதற்காக தி.மு.க.வையும், தலைவரையும் அவதூறாகப் பேசுவதாகத் தெரிகிறது. சீமான் நாக்கை அடக்கிப் பேச வேண்டும். அரசியல் அரைவேக்காட்டுத்தனமாகப் பேசக்கூடாது. அரசியல் முதிர்ச்சி இல்லாத தலைவராக சீமான் தெரிகிறார்.

பச்சோந்தி போல் ஒருநாள் ஒரு கருத்தை ஆதரித்தும், பின்பு எதிர்த்தும் பேசி வருகிறார். அவர் ஒரு அரசியல் தலைவராக இருக்கவே தகுதியானவர் அல்லர். எங்களது தலைவர் குறித்துப் பேச அவருக்கு எந்த அருகதையும் கிடையாது.

இவ்வாறு அவர் பேட்டியின்போது குறிப்பிட்டார்.

---

### திருப்பூர் வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு

## மாவட்ட அமைப்பாளர் அ.நிசார் இல்ல மணவிழா!

### கழகத்தினர் பங்கேற்று வாழ்த்துகின்றனர்!

திருப்பூர், ஜூலை 14–

திருப்பூர் வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர், கோவை மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் அ. நிசார் இல்ல மண விழாவில் கழக உடன்பிறப்புகள் பங்கேற்று வாழ்த்துகின்றனர்.

திருப்பூர் வடக்கு மாவட்ட சிறுபான்மை யினர் நல உரிமைப் பிரிவு மாவட்ட அமைப்பாளர், கோவை மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் அ.நிசார் – ஜரினா ஆகியோரின் மகள் நி.நசிமா, வ.அப்துல் ரஹ்மானின் மகன் அ.ர.அமீர் சுகைல் ஆகியோரின் மணவிழா இன்று (14.07.2024 – ஞாயிற்றுக்கிழமை) காலை 11.30 மணிக்கு மேல் 12.30 மணிக்குள் மங்கலம் பல்லடம் சாலையில் அமைந்துள்ள எம்.எஸ்.ஜே.எம் மஹாலில் நடைபெறுகிறது.

இந்த மண விழாவில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, வார்டு கழக, கிளை கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இன்னாள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக துணை அமைப்புகளை சேர்ந்த இந்நாள், முன்னாள் நிர்வாகிகள், கழக உடன் பிறப்புக்கள் மற்றும் ஆன்றோர், சான்றோர், உற்றார், உறவினர்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

---

### பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில்

## ‘மக்களுடன் முதல்வர்’ - ஊரகம் - சிறப்பு திட்ட முகாம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜூலை 14-

கடலூர் மாவட்டம், பரங்கிபேட்டை ஊராட்சி ஒன்றியம், பு.முட்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற ”மக்களுடன் முதல்வர்-ஊரகம்” என்ற சிறப்புத் திட்ட முகாம், 12.7.2024, வெள்ளிக்கிழமை, அன்று காலை 10 மணியளவில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். அ.அருண் தம்புராஜ் முன்னிலையில், வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு, 309 பயனாளிகளுக்கு ரூ.5,08,31,148/- மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொருப்பேற்றது முதல் பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். அவ்வகையில் மகளிருக்கான விடியல் பயணம், புதுமை பெண் திட்டம், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், நான் முதல்வன் திட்டம், உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டம், முதல்வரின் முகவரி, களஆய்வில் முதலமைச்சர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் அரசு அலுவலகங்களை நாடி மக்கள் செல்லும் நிலையை மாற்றி மக்களை தேடி அரசு அலுவலர்கள் சென்று மக்களின் குறைகளை போக்கும் வண்ணம் இந்த அரசு செயல்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் கடலூர், அண்ணாகிராமம், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, மேல்புவனகிரி, குமராட்சி, கீரப்பாளையம், பரங்கிப் பேட்டை, காட்டுமன்னார்கோயில், ஸ்ரீமுஷ்ணம், கம்மாபுரம், விருத்தாசலம் மங்களூர், நல்லூர் ஆகிய 14 ஊராட்சிகளில் உள்ள 683 கிராமப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் ”மக்களுடன் முதல்வர் -ஊரகம்” சிறப்புத் திட்டத்தின்கீழ் 11.07.2024 முதல் 13.09.2024 வரை மொத்தம் 91 முகாம்கள் நடைபெற உள்ளது.

இன்று நடைபெறும் மக்களுடன் முதல்வர்-ஊரகம் முகாமில் பரங்கிபேட்டை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த பு.முட்லூர், மஞ்சக்குழி, பு.ஆதிவராக நல்லூர், கீழமணக்குடி, தச்சக்காடு ஆகிய ஊராட்சி பகுதிகளுக்கு நடைபெறுகிறது. இப்பகுதி பொது மக்கள் இந்த முகாமில் பெருந்திரலாக பங்கேற்று துறை சார்ந்த தங்களின் கோரிக்கைகளை மனுவாக அளித்து உரிய தீர்வுகளை பெற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை எளிமைப்படுத்தும் வகையில் நகரப் பகுதிகளில் கொண்டுவரப்பட்ட மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தற்போது அனைத்து ஊரகப் பகுதிகளிலும் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, கூட்டுறவுத் துறை, வீட்டு வசதி வாரியம், வேளாண்மைத்துறை, தொழிலாளர் நலத்துறை, சமூக நலத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மின்சாரம் (ம) பகிர்மானத்துறை, காவல் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, தாட்கோ, மகளிர் திட்டம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மாவட்ட தொழில் மையம், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, மீன்வளத்துறை, இ-சேவை மையம் உள்ளிட்டவற்றை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர். பொது மக்கள் தங்கள் பகுதிகளில் நடைபெறும் முகாம்களுக்கு சென்று கோரிக்கை மனுக்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன்பெறலாம் என தெரிவித்தார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் வருவாய்த் துறை சார்பில் 130 பயனாளிகளுக்கு ரூ. 55,11,069/- மதிப்பீட்டில் இலவச மனைப் பட்டா, பட்டா மாற்றம், புதிய குடும்ப அட்டை, சமூக பாதுகாப்பு அட்டை போன்ற உதவிகளும், ஊரக வளர்ச்சித் துறை சார்பில் 104 பயனாளிகளுக்கு ரூ. 3,68,05,600/- மதிப்பீட்டில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் பணியாணையும், வேளாண் துறை சார்பில் 11 பயனாளிகளுக்கு ரூ.6,500/- மதிப்பீட்டில் தார்பாரலின், நெல் நுண்ணூட்டம் சார்ந்த உதவிகளும், தோட்டக்கலை துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.56,910/- மதிப்பீட்டில் மரக்கன்றுககளும், வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் 10 பயனாளிகளுக்கு ரூ.21,32,087/- மதிப்பீட்டில் பவர் டில்லர் மற்றும் உழுவை கருவிகளும், தாட்கோ சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ. 12,50,792/- மதிப்பீட்டில் CM ARISE நலத்திட்ட உதவிகளும், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் துறை சார்பில் 11 கர்ப்பிணி பெண்களுக்கு தாய் சேய்நலபெட்டகங்களும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.5,00,000/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும், ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.28,190/- மதிப்பீட்டில் விலையில்லா தையல் இயந்திரங்களும், மகளிர் திட்டம் சார்பில் 16 பயனாளிகளுக்கு ரூ.45,40,000/- மதிப்பீட்டில் சுய உதவிக் குழுக்களுக்கான நலத் திட்ட உதவிகள் என மொத்தம் 309 பயனாளிகளுக்கு ரூ.5,08,31,148/- மதிப்பீட்டிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப் பட்டன.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜ சேகரன், சார் ஆட்சியர், சிதம்பரம் செல்வி ரஷ்மி ராணி, உதவி இயக்குநர், ஊராட்சிகள் திருமதி ஷபானா அஞ்சும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் மற்றும் நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் ரூ. 2.90 கோடி மதிப்பில் பெட்ரோல் விற்பனை நிலையம், சேமிப்புக் கிடங்கு, வேளாண் வணிக வளாக மையத்தையும் திறந்து வைத்து வேளாண்மை துறையின் சார்பில் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கொண்டுவந்துள்ள ‘மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்’ திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பசுந்தாள் உர விதைகள், 45 ஏக்கருக்குரிய 900 கிலோ தக்கைபூண்டு விதைகள் வழங்கி அமைச்சர் மா.மதிவேந்தன் சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## அரியலூர் மாவட்டத்தில் - ஊரகப் பகுதிகளுக்கான ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

### அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து – கோரிக்கை மனுக்கள் பெற்றார்!

அரியலூர், ஜூலை, 14-

அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை பெரியார் நினைவு சமத்துவபுரம் சமுதாயகூடத்தில் ஊரகப்பகுதிகளில் மக்களுக்கு அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வகையில் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா முன்னிலையில் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசின் சேவைகள் குறிப்பிட்ட காலத்திற்குள் பொதுமக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அவற்றின் நீட்சியாக அன்றாடம் அரசு துறைகளை அணுகும் பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைபடுத்தி அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்றுசேரும் வண்ணம் ஊரக பகுதிகளுக்கான “மக்களுடன் முதல்வர்” திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டத்தில் இன்றையதினம் தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

இதன் தொடர்ச்சியாக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ஊரகப் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரியலூர் மாவட்டம், செந்துறை பெரியார் நினைவு சமத்துவபுரம் சமுதாயகூடத்தில் மக்களுடன் முதல்வர் திட்டத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இன்றையதினம் துவக்கி வைத்து பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டதுடன் அவற்றின் மீது உடனடி நடவடிக்கையாக 10 பயனாளிகளுக்கு வருவாய்த் துறையின் மூலாமக பட்டா மாறுதல் ஆணைகளையும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஒரு பயனாளிக்கு ஊன்றுகோலும், வேளாண்மைத்துறையின் சார்பில் 02 பயனாளிகளுக்கு மானியத்துடன் பசுந்தாள் விதையினையும், கூட்டுறவுத்துறை யின் சார்பில் 02 பயனாளிகளுக்கு பயிர் கடனுதவியாக ஒரு இலட்சம் தொகைக்காக வரவு வைக்கப்பட்ட வங்கி புத்தகத்தி னையும் பயனாளிகளுக்கு வழங்கினார். இன்றைய முகாமில் அரியலூர் மாவட்டத்தில் 1748 மனுக்கள் பெறப்பட்டுள்ளது.

இம்முகாம்களில் பெறப்படும் அனைத்து கோரிக்கை மனுக்களும் 30 தினங்களுக்குள் சம்மந்தப்பட்ட துறைகளால் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

மேலும் அரியலூர் மாவட்டத்தில் இத்திட்டம் ஏற்கனவே முதல் கட்டமாக அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் நகராட்சிகளிலும், உடையார் பாளையம் மற்றும் வரதராஜன்பேட்டை பேரூராட்சி களிலும் நடத்தப்பட்டு மனுக்கள் பெறப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் 16.07.2024 நாளன்று தாமரைக்குளம் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 18.07.2024 நாளன்று ரெட்டிப்பாளையம் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 23.07.2024 நாளன்று கடுகூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 25.07.2024 நாளன்று சுண்டக்குடி பஞ்சாயத்து அலுவலகத்திலும், 26.07.2024 நாளன்று வாலாஜநகரம் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 30.07.2024 நாளன்று மேலக்கருப்பூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 31.07.2024 நாளன்று சுப்புராயப்புரம் பஞ்சாயத்து அலுவலகத்திலும் நடைபெற உள்ளது.

திருமானூர் ஊராட்சி ஒன்றியத்தில் 16.07.2024 நாளன்று தூத்தூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 18.07.2024 நாளன்று திருமழபாடி பஞ்சாயத்து அலுவலகத்திலும், 23.07.2024 நாளன்று கீழக்கொளத்தூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 25.07.2024 நாளன்று திருமானூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 26.07.2024 நாளன்று வெங்கனூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 30.07.2024 நாளன்று பூண்டி பஞ்சாயத்து அலுவலகத்திலும், 31.07.2024 நாளன்று ஏலாக்குறிச்சி பஞ்சாயத்து அலுவலகத்திலும் நடைபெற உள்ளது.

செந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் 16.07.2024 நாளன்று குமிழியம் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 18.07.2024 நாளன்று இரும்புலிக்குறிச்சி பஞ்சாயத்து அலுவலகத்திலும், 23.07.2024 நாளன்று சிறுகளத்தூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 25.07.2024 நாளன்று அசாவீரன்குடிக்காடு கிராம சேவை மையத்திலும், 26.07.2024 நாளன்று நமங்குணம் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 30.07.2024 நாளன்று தளவாய் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 31.07.2024 நாளன்று சன்னாசிநல்லூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும் நடைபெற உள்ளது.

ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்தில் 16.07.2024 நாளன்று கங்கைகொண்டசோழபுரம் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 18.07.2024 நாளன்று குருவாலப்பர்கோயில் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 23.07.2024 நாளன்று கல்லாத்தூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 25.07.2024 நாளன்று தத்தனூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 26.07.2024 நாளன்று அங்கராயநல்லூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 30.07.2024 நாளன்று இறவாங்குடி பஞ்சாயத்து அலுவலகத்திலும் நடைபெற உள்ளது.

ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியத்தில் 16.07.2024 நாளன்று ஆண்டிமடம் இசேவை மையத்திலும் 18.07.2024 நாளன்று கூவத்தூர் இசேவை மையத்திலும், 23.07.2024 நாளன்று விளந்தை இசேவை மையத்திலும், 25.07.2024 நாளன்று திருக்களப்பூர் இசேவை மையத்திலும், 26.07.2024 நாளன்று அழகாபுரம் இ-சேவை மையத்திலும், 30.07.2024 நாளன்று பெரியாத்துக்குறிச்சி பஞ்சாயத்து அலுவலகத்திலும், 31.07.2024 நாளன்று குவாகம் இ-சேவை மையத்திலும் நடைபெற உள்ளது.

தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்தில் 16.07.2024 நாளன்று ஸ்ரீபுரந்தான் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 18.07.2024 நாளன்று அம்பாபூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 23.07.2024 நாளன்று நடுவலூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 25.07.2024 நாளன்று இருகையூர் பஞ்சாயத்து அலுவலகத்திலும், 26.07.2024 நாளன்று சோழமாதேவி பஞ்சாயத்து அலுவலகத்திலும் நடைபெற உள்ளது.

மேற்கண்ட பட்டியலில் உள்ள நாட்களில் ஊராட்சிகளுக்குட்பட்ட பொது மக்கள் இச்சிறப்பு முகாமில் தங்கள் கோரிக்கைகள் தொடர்பான தேவையான ஆவணங்களுடன் 15 அரசு துறைகளைச் சேர்ந்த 44 சேவைகளை பெற மனு அளித்து பயன்பெறலாம்.

இம்முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.ச.கலைவாணி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் கங்காதாரிணி, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, செந்துறை வட்டாட்சியர் வேலுமணி,ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன்,மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயி கதிரவன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ஆதி.இளங்கோவன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் செ.இளஞ்செழியன், கழக நிர்வாகிகள் காளமேகம், கருணாநிதி, ராமராஜன், மாரிமுத்து, ஆனந்த், ரமணி, சுந்தர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மாவட்ட நிலை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்



சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் ஒன்றியம் மல்லியகரை ஊராட்சியில் இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோன் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருஉருவப்படத்திற்கு சேலம் கிழக்கு மாவட்ட பொருளாளர் ஆர். வி. ஸ்ரீராம் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றியக் கழகச் செயலாளர் டாக்டர் வே. செழியன், பூக்கடை ராஜா, ஜோதி, கருணாநிதி, தருமபுரி டாக்டர் கந்தசாமி, பெரம்பலூர் சத்யா, வரதராஜன், சிலம்பரசன், கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.